**O.S. No. 8/2020**

**Date: 08.10.2025**

**பி. வா.சா.1. பிராபகரன்**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது தந்தையும் இராமசாமி நாடாரும் கூட்டாக கிரைய வாங்கிய சொத்தில் 1வது தபசில் சொத்தை தவிர வேறு சொத்து கிடையாது என்றால் சரிதான். எனது தந்தையும் இராமசாமி நாடாரும் கூட்டாக கிரைய வாங்கிய சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டதாக நான் சொல்லியுள்ளதை பொறுத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி வாய்மொழி பாகம் குறித்து வேறு யாருக்கும் தெரியுமா என்றால் எனது தந்தையின் தம்பி நாகராஜனுக்கு தெரியும். நாகராஜனுக்கும் எனக்கும் விரோதம் கிடையாது. நாகராஜனை விசாரித்து வாய்மொழி பாகத்தை நிருபிக்க தயராக உள்ளேனா என்றால் தயராக இல்லை அவருக்கு வயதாகி விட்டது. எனது சித்தப்பா நல்ல பேச்சு திறனும் கேட்கும் திறனுடன் உள்ளார். நடமாடிக் கொண்டு தான் உள்ளார். எனது சித்தப்பாவை நீதிமன்ற ஆணையர் மூலம் விசாரிக்க தயராக உள்ளேனா என்றால் தயராக உள்ளேன். நாகராஜை விசாரித்தால் தான் நான் சொல்லும் 1978 வாய்மொழி பாகம் உண்மையா இல்லையா என்பது தெரியவரும். இராமசாமி நாடார் அவரது சொத்தைப் பொறுத்து 06.08.1997 ல் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி விவரத்தை நான் பிராதில் படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி உயிலை நான் நீதிமன்றத்தில் இருந்தும் படித்து பார்க்கவில்லை. நான் எதிர் வழக்குரையில் தாக்கல் செய்யும்

போது மேற்படி உயிலை மறுத்து விவரம் சொல்லி தாக்கல் செய்ய விவரம் எதுவும் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்ய எதிர் உரையில் 13 வது பத்தியில் உயிலை பற்றி சொல்லியுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டதா என்று கேட்டால் என்னால் சொல்லப்படவில்லை. வழக்கறிஞருக்கு தான் தெரியும். இராமசாமி நாடார் எழுதி வைத்த உயில் ஆவணத்தில் கண்ட சொத்தை பொறுத்து எனக்கு எதுவும் உரிமை கிடையாது என்றால் சரிதான். மேற்படி உயிலின் சான்றிட்ட நகலை வாதி தரப்பில் வா.சா.ஆ,.9 ஆக தாக்கல் செய்துள்ளரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இராமசாமி நாடார் 06.08.1997 ல் அவர் பிள்ளைகளுக்கு எழுதி வைத்த உயிலை பற்றி எனக்கு ஆட்சேபணை எதுவும் கிடையாது. இராமசாமி நாடாருக்கு கேசவன், மாதவன் ஆகிய இரண்டு மகன்கள். வழக்கில் கண்ட 1வது சொத்தை தவிர்த்து மேற்படி உயிலில் கண்ட இதர சொத்துக்களை உயில் சரத்து படி மேற்படி கேசவன், மாதவன் ஆகியோர் தனித் தனியாக அனுபவம் செய்து வருகிறார்களா என்றால் அது பற்றி தெரியாது. பிராது 1 வது சொத்துக்கு பிராதில் கூறப்பட்டுள்ள பழைய சர்வே எண் புதிய சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எல்லாம் சரிதான். 1வது தபசில் உள்ள 3வது அயிட்ட சொத்தை கிரயம் பெறும் போது அதில் கிணறு கிடையாது. மேற்படி சொத்தை கிரயம் பெற்ற பின்பு தான் எனது தந்தையும் இராமசாமி நாடாரும் பொதுவில் செலவு செய்து கிணறு வெட்டி தனித் தனியாக மோட்டார் பம்பு செட்

ரும்கள் வைத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கிணறு, மோட்டார் பம்பு செட்டி மற்றும் பொது வகைக்கு 25 செண்ட் வைத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அது போக மீதம் 89 செண்ட் நிலம் தான் 2ம் வாதி கைவசம் உள்ளது. 1வது தபசில் கண்ட சொத்துக்களில் எனது தகப்பனாருக்கு பிரிவினையில் கிடைத்ததாக சொல்லப்படும் சொத்துக்களுக்கு எனது தகப்பனார் பெயரில் தனி பட்டா எதுவும் இல்லை மற்றம் தனியாக தீர்வை எதுவும் கிடையாது. 1வது தபசில் 3வது அயிட்ட சொத்துக்கு தற்போதும் யோகமணி அம்மாள், மற்றும் சிவகாமி அம்மாள் ஆகியோரின் பெயரில் தான் கூட்டாக பட்டா உள்ளது. இதர சொத்துக்களுக்கு முன் பாத்தியஸ்தர்கள் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இராமசாமி நாடாரும் எனது தந்தையும் பொதுவாக வாங்கப்பட்ட சொத்துக்களில் பாதி எனது தகப்பானருக்கும் மீதி பாதி இராமசாமி நாடாருக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 1வது தபசில் உள்ள 1,2, 3 ,4 , 6 அயிட்ட மொத்த சொத்துக்களின் அளவு 3 ஏக்கர் 6 செண்ட் என்றால் சரிதான். அதில் பாதி 1 ஏக்கர் 53 செண்ட் இராமசாமி நாடாருக்கு உரிமை உள்ளது என்றால் சரிதான். இராமசாமி நாடாருக்கு கிணற்று பக்கம் அவர்களுக்கு சொத்து ஒதுக்கப்பட்டதால் அவர்களுக்கு சரி பாதிக்கு சற்று குறைவாக ஒதுக்கப்பட்டது. 1வது தபசில் உள்ள 1, 2, 4, 6, அயிட்ட சொத்துக்களில் சேர்ந்து 2 ஏக்கர் 17 செண்ட் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து எங்கள் கைவசம் உள்ளது என்றால் சரிதான். 1,2,3,4,6 அயிட்ட சொத்து

கிரைய பத்திரப்படி எங்களுக்கு 1 ஏக்கர் 53 செண்ட் இடத்திற்கு கூடுதலாக 64 செண்ட் இடம் கூடுதலாக உள்ளது. 1வது தபசில் 5ம் அயிட்ட சொத்தை நானும் யோகமணி அம்மாளும் சேர்ந்து களியப்பநாடாருக்கு கடந்த 23.09.1975 ல் கிரயம் எழுதி கொடுத்தோம் என்று சொன்னால் லோகமணி தான் கிரயம் கொடுத்தார். பொதுவாக கிரயம் பெற்றதால் எனது தந்தை கையெழுத்து மட்டும் போட்டுக் கொடுத்தார். மேற்படி சொத்து இளவராக இருந்த போது எனது பெயரிலும் யோகமணி பெயரிலும் பொதுவாக கிரயம் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்தினை கிரயம் எழுதிக் கொடுத்த காலத்திலும் நான் இளவராக தான் இருந்தேன். நான் இளவராக இருந்ததால் எனது தந்தை பாதுகாவலர் என்ற முறையில் எனக்காக கையொப்பம் செய்தார். மேற்படி கிரயத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி கிரய ஆவணத்தை யார் யார் வாங்கினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது எனது தந்தை சொல்லி தெரியும். மேற்படி விவரத்தை எனது ஆவணத்தில் சொல்லியுள்ளனா என்றால் எனக்கு தெரியாது. வழக்கறிஞரை தான் கேட்க வேண்டும். இராமசாமி நாடார் 21.08.1997 ல் இறந்து விட்டார் என்றால் இறந்த விவரம் தெரியும். தேதி தெரியாது. இராமசாமி நாடார் 21.08.1997 ல் இறந்து விட்டார் என்று ஒரு இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளதை பற்றி எனக்கு ஆட்சேபணை கிடையாது. 1,2,3,4, 6 அயிட்ட சொத்துக்களின் மொத்த

விஸ்தீரத்தில் எங்களிடம் கூடுதலாக உள்ள 64 சென்டை பிரித்து தர வாதிகள் எங்களிடம் கேட்டார்களா என்றால் கேட்கவில்லை.மேற்படி கூடுதலாக உள்ள 64 சென்டை பிரித்து தர வாதிகள் இராமசாமி நாடார் இறந்த பின்பு எங்களிடம் அடிக்கடி கேட்டார்கள் என்றாலும் அதை தருவதாக ஒப்புக் கொண்டு எனது தந்தை காலம் கடத்தி வந்தார் என்றாலும் சரியல்ல. மேற்படி 64 சென்டை பிரிவினை செய்து கொடுக்காததால் வாதிகள் குடும்ப பெரியவர்களிடம் சொல்லி 1,2,3,4, 6, அயிட்ட சொத்துக்களை சம அளவில் பிரிவினை செய்து கொடுக்க மத்தியஸ்தம் பேசப்பட்டது என்றால் சரியல்ல. மத்தியஸ்தம் பேசப்பட்டதில் 1,2, 4, 6, அயிட்ட சொத்துக்களில் உள்ள 2 ஏக்கர் 17 சென்ட் என் வசமே இருக்கட்டும் என்றும் கூடுதலாக இருக்கும் 64 சென்டிற்கு ஈடாக பிராது 2 வது தபசு சொத்தை வாதிகளுக்கு கொடுப்பதாகவும் என்னுடைய தந்தை ஒப்புக் கொண்டார் என்றால் சரியல்ல. 64 சென்ட் இடத்தை பிரித்து வாதிகள் கேட்டதால் விரோதம் கொண்ட எனது தந்தை வாதிகள் மீது சிவகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S. 154/2011 என்ற வழக்கை அவருக்கு சம்பந்தப்படாத சொத்தை பொறுத்து தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. மேற்படி O.S. 154/2011 என்ற வழக்கை இந்த வழக்கின் வாதிகளும் கட்சி செய்து நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கு முழு விசாரணைக்கு பின்னர் எனது தந்தைக்கு விரோதமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கை எதிர்த்து எனது தந்தை உயிருடன் இருக்கும் வரை

மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தை இறந்த பின்பு நாங்களும் மேல்முறையீடு செய்யவில்லை. O.S. 154/2011 என்ற வழக்கு சொத்தை பொறுத்து நான் இந்நீதிமன்றத்தில் O.S. 98/2020 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கையும் இந்த வாதிகள் எதிர் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான்.இவ்வழக்கில் கண்ட 2ம் அயிட்ட சொத்தும் அதன் கூடுதல் விஸ்தீரணம் உள்ள 275/ 1 பி – ல் உள்ள இடம் முழுவதும் 13.07.1972 பாகப் பிரிவினை மூலம் எனது தந்தைக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த இடத்தில் 64 செண்ட் இடத்தை மட்டும் எங்களிடம் கூடுதலாக உள்ள இடத்திற்கு ஈடாக வாதிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று இவ் வழக்கில் பரிகாரம் கோரி உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பரிகாரம் கிடைக்காத பட்சத்தில் 1வது தபசில் உள்ள 1, 2, 3, 4, 6 அயிட்ட சொத்துக்களை சம அளவில் பிரிவை செய்து வாதிகள் வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் சரிதான். 2வது தபசில் கண்ட 64செண்டை மட்டும் வாதிகள் தங்களுக்கு ஒப்படைக்க கேட்பதாலும் அந்த இடத்திற்கு 275 1 பி – ல் உள்ள கிணற்றில் உரிமை கேட்காததாலும் அந்த கிணற்றை இவ்வழக்கில் தாவா சொத்தாக சேர்க்காது பகுதி பாகப் பிரிவினை என்ற கோட்பாட்டிற்கு இவ்வழக்கு உள்ளாகாது என்றால் சரியல்ல. பிராது 1வது தபசில் கண்ட 1,2, 3, 4, 6 அயிட்ட சொத்துக்கள் எனது தந்தையாலும் இராமசாமி நாடராலும் இப்போதும் எந்த பிரிவினையும் செய்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பிரிவினை

செய்யப்படாத காரணத்தால் இன்றளவும் எனது தந்தை பெயரில் பட்டா மாறப்படவில்லை என்றால் சரியல்ல. தனியாக தீர்வை செலுத்தவில்லை என்றாலும் சரியல்ல. பிராது 1வது தபசில் கண்ட 1,2,3,4, 6 அயிட்ட சொத்துக்களில் இராமசாமி நாடாருக்குள்ள பாதி பாகம் 06.08.1997 தேதிய உயிலில் பி தபசில் 16 அயிட்டமாக காட்டப்பட்டுள்ளதாலும் பி தபசு சொத்து முழுவதும் இந்த வழக்கில் 2ம் வாதிக்கு மேற்படி உயில் மூலம் கொடுக்கப்பட்டுள்ளதாலும் 2ம் வாதி சகோதரர் கேசவன் இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரம் சட்டப்படி வாதிக்கு கிடைக்கதக்கது என்றும் நான் வம்புக்காக வழக்கை நடத்தி வருகிறேன் என்றாலும் சரியல்ல. யோகமணி 2ம் வாதிக்கு 25.04.2022ல் உயில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி யோகமணி அம்மாள் அவரின் சொத்தை பொறுத்து எழுதி வைத்த உயிலை பொறுத்து எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். தற்போது 1ம் வாதி இறந்து விட்டார். அதனால் வழக்கு பரிகாரம் 2ம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.